இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 65 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 28 – திங்கள்கிழமை 14 அக்டோபர் 2024 – திருச்சி ★ ★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 65 : Thiruvalluvar Year - 2055 - Purataasi 28 - Monday 14 October 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

# என்றும் முரசொலிக்கும் செல்வத்தின் கொள்கைப் பேனா!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் இரங்கல் மடல்.**

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாத நிலையில், அண்ணன் முரசொலி செல்வம் எனும் கழகத்தின் கொள்கைச் செல்வத்தை, திராவிட இயக்கத்தின் படைக்கலனை இழந்துவிட்டோம். அவரை இயற்கையிடம் பறிகொடுத்துவிட்டுத் தவித்து நிற்கிறோம். உங்களில் ஒருவனான எனக்கு உடன்பிறப்புகளான நீங்களும், உடன்பிறப்புகளான உங்களுக்கு உங்களில் ஒருவனான நானும் ஆறுதல் தெரிவித்து நம்மை நாமே தேற்றிக்கொள்ள வேண்டிய வேதனை நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.



தலைவர் கலைஞரின் தமக்கை மகனாக தலைவரின் மனசாட்சியாகத் திகழ்ந்த அரசியல் மேதை முரசொலி மாறன் அவர்களின் தம்பியாகப் பிறந்தவருக்குப் ‘பன்னீர்செல்வம்’ என்று திராவிட இயக்கத் தளகர்த்தர் சர். ஏ.டி.பன்னீர்செல்வத்தின் பெயர் சூட்டியவர் நம் உயிர்நிகர்த் தலைவர். **பெற்றெடுத்த தாய் போல, பெயர் சூட்டிய தலைவர் கலைஞரே அவருக்கு இரண்டாம் தாயாக இருந்து அரவணைத்து வளர்த்தார். தலைவரின் நிழலில் வளர்ந்த செல்வம், தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளை எனப்படும் முரசொலி என்கிற கொள்கை முழக்கப் பாசறையில் தலைவர் கலைஞரிடமும் தன் அண்ணனும் அரசியல் மேதையுமான முரசொலி மாறன் அவர்களிடமும் பயிற்சி பெற்றார்.** அந்தப் பயிற்சியை அவர் எங்களுக்கும் தந்தார்.

செல்வம் அவர்கள் பிறந்தபோதே தலைவரின் அன்னை – எங்கள் பாட்டி அஞ்சுகம் அம்மையார் அவர்கள், தலைவருக்குப் பெண்பிள்ளை பிறந்தால், செல்வத்துக்கு மணம் முடித்து வைக்க வேண்டும் என்று விரும்பியவர். அன்னையின் அன்பு ஆணையை நிறைவேற்றும் வகையில்தான், என் தங்கை பிறந்தபோது, ‘செல்வி’ என்று பெயர் சூட்டினார் அன்புத் தலைவர். “செல்வத்துக்கேற்ற செல்வி” என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட திருமணமல்ல. சொர்க்கத்தை விடவும் சுகமான கொள்கை உரமிக்க குடும்ப உறவுகளால் நிச்சயிக்கப்பட்டு, இயக்கமே குடும்பம் என வாழும் உடன்பிறப்புகளின் வாழ்த்துகளால் நிறைவேறியது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடந்தேறிய தந்தை பெரியாரும், மூதறிஞர் ராஜாஜியும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்தும் தமிழ்நாட்டின் முன்னணித் தலைவர்களும் ஒருசேர மேடையேறி மனதார வாழ்த்திய நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் குடும்பத்தின் சுயமரியாதைத் திருமணம் அது.

தலைவர் கலைஞரின் மருமகன், என் தங்கையின் கணவர் என்ற முறையில் எனக்கும் என் உடன்பிறந்தவர்களுக்கும் அவர் மாமா – அத்தான் என்ற உறவு முறையில் ’குட்டி அத்தான்’ என்று கூப்பிடுவது வழக்கம் என்றாலும், எப்போதும் அவர் எனக்கு மூத்த அண்ணனாகவே இருந்தார். இயக்கப் பணிகளிலும் இயக்கத்தின் கொள்கை முரசமான முரசொலி பணியிலும் நான் காட்டிய ஆர்வத்தை உணர்ந்து என் விரல்பிடித்து வழிகாட்டியவர் அண்ணன் முரசொலி செல்வம்தான். எனக்கு நேரம் வாய்க்கும்போதெல்லாம் அவரைச் சந்தித்து அரசியல் செய்திகளை அறிந்துகொள்வேன்.

அவருக்குப் பேரறிஞர் அண்ணாவிடம் நிறைய பற்று உண்டு. அண்ணாவை அவர் அடிக்கடி சந்தித்துப் பேசுவதும் உண்டு. அண்ணா சொன்ன செய்திகளை, வரலாற்றுத் தகவல்களை என்னிடம் பகிர்ந்துகொள்வார். அதுபோல தலைவர் கலைஞரிடம் பேசியதையும் பகிர்ந்துகொண்டு இயக்கத்தை மேலும் வலுப்படுத்தும் பணிகள் குறித்து ஆலோசனை வழங்குவார்.

பள்ளி, கல்லூரியில் படித்த நேரம் போக, தலைவர் கலைஞரின் பிள்ளைகள் எல்லோரும், அவரின் மூத்த பிள்ளையான முரசொலியின் மடியில்தான் தவழ்ந்தோம். தலைவரின் நேரடிப் பார்வையில், அவரது மனசாட்சியான முரசொலி மாறன் அவர்களின் பொறுப்பில் முரசொலி அச்சாகி வந்தது. அச்சிட்ட இதழ்களைப் பார்சல் கட்டி, வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியை நாங்கள் மேற்கொள்வோம். அப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த அண்ணன் செல்வம் அவர்கள் பகுதி நேரமாக முரசொலியில் பணியாற்றி, கட்டுரைகள் பெட்டிச் செய்திகள் எழுதிக் கொண்டிருந்தார். என்னையும் ஊக்கப்படுத்தினார்.

## உங்களில் ஒருவன்

**கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள், கடிதங்கள் ஆகியவற்றைத் தேர்ந்தெடுத்து, ‘தின பலன்’ என்ற தலைப்பில் தொகுத்து வந்தேன். அது முரசொலியில் தொடர்ந்து வெளிவந்தது. நான் எழுதித் தருவதை முரசொலி ஆசிரியர் குழுவினர் வடிவமைப்பதை ஆர்வத்துடன் கவனித்து, அதனையும் கற்றுக்கொள்ள விரும்பியபோது, வடிவமைப்பு பற்றி எனக்குச் சொல்லிக் கொடுத்த ஆசான், அண்ணன் முரசொலி செல்வம்தான்.**





“தலைப்புச் செய்தி, தலையங்கம், துணைத் தலைப்புகள், சிறு தலைப்புகள், கருத்துப்படங்கள், படங்களை எந்தளவுக்கு வெளியிட வேண்டும், முதல் பக்கத்துக்கு உள்ள முக்கியத்துவம், கடைசிப் பக்கத்தில் இடம்பெற வேண்டிய முக்கியச் செய்திகள், பெட்டிச் செய்திகள், கட்டுரைகள், கட்டுரைக்கான துணைத் தலைப்புகள், ஒவ்வொருவர் பெயரையும் எப்படி வெளியிடவேண்டும். . . இப்படி ஏராளமான சவால்களைச் சொல்லித் தந்து, ஒரு பக்கத்தை எப்படி வடிவமைக்க வேண்டும் என்று சொல்லித்தந்தார் அண்ணன் செல்வம் அவர்கள்” என்று என்னுடைய தன் வரலாற்று நூலான ‘உங்களில் ஒருவன்’ புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். என் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் அண்ணன் செல்வம் எப்படித் துணை நின்றாரோ அப்படியேதான் தலைவர் கலைஞருக்கும் அவர் தலைமையிலான கழகத்திற்கும் துணை நின்றார். தோள் கொடுத்தார்.

நெருக்கடிநிலைக் காலத்தில் கழகமும் தலைவர் கலைஞரும் கடும் சோதனைகளை எதிர்கொண்டபோது முரசொலி மாறன் அவர்களும் நானும் கழக முன்னோடிகளும் மிசா சிறை வாசம் எனும் கொடுமைக்குள்ளானோம். தனிமைச்சிறை போன்ற சூழலில் இருந்த தலைவர் கலைஞருக்குத் துணையாக இருந்து முரசொலி பணிகளிலும் கழகச் செயல்பாடுகளிலும் தோள் கொடுத்தவர்களில் முதன்மையானவர் அண்ணன் செல்வம் அவர்கள். அ.தி.மு.க. ஆட்சியில் இயக்கமும் முரசொலியும் எதிர்கொண்ட சவால்களின் போதும் தலைவர் கலைஞரின் கட்டளைகளை நிறைவேற்றும் செயல் வீரராக இருந்தவர் செல்வம்.

திருச்செந்தூர் திருக்கோயிலின் அறநிலையத்துறை அதிகாரியின் சந்தேக மரணம் தொடர்பான விசாரணைக் கமிஷன் அறிக்கையை அ.தி.மு.க. அரசு வெளியிடாமல் காலங்கடத்திய நிலையில், எதிர்க்கட்சித் தலைவரான கலைஞர் அதனை வெளியிட்டார். மறைத்து வைத்த படுபாதகங்கள் வெளிப்பட்ட அதிர்ச்சியிலும், அறநிலையத்துறை அதிகாரி கொலை செய்யப்பட்ட உண்மை வெளிப்பட்ட ஆத்திரத்திலும் அன்றைய ஆட்சியாளர்கள் காவல்துறையை ஏவி முரசொலி செல்வத்தை, சட்டமுறைகளுக்குப் புறம்பாகக் கைது செய்து, அலைக்கழித்தனர். அந்த நிலையிலும், எந்த நிலையிலும் அவர் நெஞ்சுரத்துடனேயே நெருக்கடிகளை எதிர்கொண்டார்.

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் பிரதமரானபோது முரசொலி மாறன் அவர்கள் ஒன்றிய அரசில் கேபினட் அமைச்சராகப் பொறுப்பேற்றார். அதனால், அவர் வகித்த முரசொலியின் ஆசிரியர் பொறுப்பை யார் ஏற்பது என்றபோது, தன் மூத்த பிள்ளையாகிய முரசொலி எனும் திராவிடச் செல்வத்தை அண்ணன் செல்வத்திடம் ஒப்படைத்தார் தலைவர் கலைஞர். அந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் வகையில் முரசொலியை மேலும் மேலும் கூர்தீட்டிய படைக்கலனாக மாற்றியவர் அண்ணன் முரசொலி செல்வம்.

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்